# கணக்கீடு

## நிறைவில் பதிவு



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

**தேர்ச்சி :**

**9.0 நிறுவனமொன்றின் கணக்கறிக்கைகள் பூரணத்துவமடையாத போது நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்.**

**தேர்ச்சி மட்டம்**

**9.1 நிறைவில் பதிவுகளை விளக்கி அதற்குரிய காரணங்களை முன்வைத்தல்**

## நிறைவில் பதிவு

வணிகங்களில் கொடுக்கல் வாங்கல்கள் இரட்டைப்பதிவு முறைக்கமைய பதிவுசெய்யப்படும். இருப்பினும் சில வணிகங்களில் பூரண இரட்டைப்பதிவு முறையில் பதிவு செய்யாது ஒரு பதிவு மட்டும் அல்லது முழுமையாகப் பதியப்படாமல் தவறவிடப்பட்டிருப்பதனை நிறைவில் பதிவு எனப்படும்.

## நிறைவில் பதிவு இடம்பெறுவதற்கான காரணங்கள்

1) இரட்டைப்பதிவு தொடர்பான விளக்கமின்மை
2) இரட்டைப்பதிவு முறையில் கணக்குகளைப் பேணுவதற்கு அதிக செலவு ஏற்படல்
3) கவனயீனம்
4) தனியாள் வணிகம், பங்குடமை வணிகம் போன்றவற்றிற்கு கணக்கு வைத்தல் கட்டாயமாக்கப்படாமை.

## நிறைவில் பதிவு முறையில் பிரதிகூலங்கள்

1) செயற்பாட்டுப் பெறுபேற்றினை சரியாக அறிந்து கொள்ள முடியாமை
2) நிதி நிலைமை தொடர்பாக சரியான விளக்கத்தினைப் பெற முடியாமை
3) தீர்மானம் எடுக்கத் தேவையான தகவலைப் பெற முடியாமை

## நிறைவில் பதிவினைபின்பற்றும் வணிகத்தின் நிதிப் பெறுபேற்றினை

1) தேறிய சொத்துக்களினூடாகச் செயற்பாட்டுப் பெறுபேற்றினை கணிப்பிடுதல்.
2) நிறைவில் பதிவுகளை இரட்டைப்பதிவு முறைக்கு மாற்றம் செய்து நிதிக்கூற்றுக்களைத் தயார் செய்தல்.

தொகுப்பு: திரு. ம.அசோக்குமார் (ஆசிரியர் - கணக்கீடு, யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

கணினி வடிவமைப்பு: திரு. இ.சிவச்செல்வன் (ஆசிரியர் - தகவல் தொ. தொழிநுட்பம், யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk